# ‘மருத்துவ மாணவர்களுக்கு அவசர முதலுதவி பயிற்சிமுறை கட்டாயமாக்கப்பட வேண்டும்’

**தாம்பரம், மார்ச் 17:** மருத்துவம் சார்ந்த படிப்பு மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் உயிர் காக்கும் அவசர முதலுதவி சிகிச்சை குறித்த பாடத்திட்டம் மேம்படுத்தப்பட்டு, களப் பயிற்சி முறையைக் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று அப்பல்லோ மருத்துவமனை அவசர சிகிச்சை மருத்துவப்பிரிவு தலைமை மருத்துவர் டாக்டர் செந்தில் குமார் வலியுறுத்தினார்.

குரோம்பேட்டை ஸ்ரீபாலாஜி மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் மயக்கவியல், அவசர சிகிச்சை துறைத் தலைவர் பேராசிரியர் எம்.ஆர்.வசந்தன் தலைமையில் அவசர முதலுதவி சிகிச்சை பயிலரங்கு செவ்வாய்கிழமை நடைபெற்றது.

பயிலரங்கில் விபத்தில் சிக்கியவர்கள், மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயிர்காக்கும் அவசர முதலுதவி சிகிச்சை குறித்த களப்பயிற்சி வழங்கப்பட்டது. உயிர் காக்கும் அவசர முதலுதவி சிகிச்சை அவசியம் குறித்து சிறப்பு விருந்தினர் டாக்டர் செந்தில் குமார் பேசியது: மாரடைப்பு உள்ளிட்ட எதிர்பாரா உடல்நலக் குறைவு காரணமாக பாதிக்கப்படுகிறவர்களுக்கு உடனடியாக உரிய அவசர முதலுதவி சிகிச்சை அளிப்பதன் மூலம் உயிர்பிழைக்க வைக்க முடியும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முதலுதவி சிகிச்சை அளிக்க அனைத்து மருத்துவர்களும் தயங்காமல் முன் வர வேண்டும். உயிர் காக்கும் உயர் சேவை அறக்கட்டளை மூலம், மருத்துவத்துறை சார்ந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், தன்னார்வ ஆட்டோ ஓட்டுநர்கள் உள்ளிட்ட பல தரப்பினருக்கும் இலவசமாகப் பயிற்சி அளித்து வருகிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய அவசர முதலுதவி சிகிச்சை அளிக்கும் பயிற்சியை, மருத்துவம் சார்ந்த படிப்பு மேற்கொள்ளும் மாணவர்கள் மட்டுமல்லாமல் அனைவரும் பெற உரிய நடவடிக்கை அவசியம் என்றார் அவர்.

பயிலரங்கில் பாலாஜி மருத்துவக்கல்லூரி கல்வி ஆலோசகர் வீரபாகு, இந்திய பல்மருத்துவர் சங்கத் தலைவர் அருண்குமார், செயலர் செந்தாமரைக் கண்ணன், பயிலரங்கு ஒருங்கிணைப்பாளர் எஸ்.மணிகண்டன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.